சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No: 94/2024 Date: 24.06.2026

வாதி தரப்பு சாட்சி–1(P.W.1) ன் வாக்குமூலம் (1872 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திரு.N.வீரராஜ், கிரேடு –2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : பூபதிராஜ் | சாதி | : | |
| த/பெ | : சண்முகபெருமாள் | சமயம் | : | |
| கிராமம் | : ராஜபாளையம் | தொழில் | : | |
| தாலுகா | : ராஜபாளையம் | வயது | : | 35 |

முதல் விசாரணை–

நான் இவ்வழக்கில் வாதி வங்கியின் கிளை மேலாளர். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். வழக்கு விபரங்கள் தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். 23.09.2013 ம் தேதி கல்வி கடன் விண்ணப்பம் அசல் **வா.சா.ஆ.1.** 09.10.2013 ம் தேதி கல்வி கடன் அனுமதி கடிதம் அசல் **வா.சா.ஆ.2.** 25.11.2013 ம் தேதி கல்வி கடன் ஒப்பந்த பத்திரம் அசல் **வா.சா.ஆ.3**. 25.11.2013 ம் தேதி ஒப்பந்த பத்திரம் அசல் **வா.சா.ஆ.4.** 25.11.2013 ம் தேதி பொறுப்பேற்பு கடிதம் அசல் **வா.சா.ஆ.5.** 04.02.2019 ம் தேதி கடன் உயிர்ப்பு கடிதம் அசல் **வா.சா.ஆ.6.** 24.02.2021 ம் தேதி கடன் உயிர்ப்பு கடிதம் அசல் **வா.சா.ஆ.7.** 22.12.2022 ம் தேதி கடன் உயிர்ப்பு கடிதம் அசல் **வா.சா.ஆ.8.** 18.01.2024 ம் தேதிய பிரதிவாதியின் வங்கி கணக்கு விபரம் கணினி நகல் **வா.சா.ஆ.9.** பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)